உ

# நடராஜப் பத்து

## சிவநாமாவழியுடன்



சோதிடவிலாச புத்தகசாலை

யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

# நடராஜப் பத்து

## சிவநாமாவழியுடன்




பதிப்பாளர் :

சோதிடவிலாச புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

# திருச்சிற்றம்பலம் போற்றி

திருச்சிற்றம்பலம்

தோற்றந் துடியதனிற் தோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமா
யூன்றி மலப்பதத்தி லூற்றதி ரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வமுயர் கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலு
மன்றுநிம் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை [ம்
குன்றாத இயல்புடையார் தொண்டராங் குணமிக்கார்

ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி யண்டம்நீ
மறைநான்கி னடிமுடியுநீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ யனலும்நீ
மண்டலமி ரண்டேழும்நீ
பெண்ணும்நீ யாணும் பல்லுயிர்க்குயிரும்நீ
பிறவும்நீ யொருவனீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பெற்றதாய் தந்தைநீயே
நண்ணுநற் பொருளும்நீ யிருளும்நீ யொளி
நாதனும் வந்தவனும்நீ (யும்நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும்நீ யிந்த
நானிலந் தந்தவனுநீ
எண்ணரிய சீவகோடிக ளீன்ற வப்பனே
என்குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட

மாலாட நூலாட மறையாடத் திரையாட
வசனமுறை பிரமனாடக்

கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்

குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடை
குழந்தைமுரு கேசனாடத் [யாடக்

தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
தனியட்ட பாலராடத்

தகுதும்பை யறுகாட நந்திவா கனமாடத்
தாளநெறி மாதராட

யானாட வினையோட வெனைநாடி யிதுவேளை
யிசைவிருதொ டாடிவருவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

கடலென்ற புவிமீதி லலையென்ற யுருக்கொ
கனவென்ற வாழ்வைநம்பிக் [ண்டு

காற்றென்ற மூவாசை யாற்றெருஞ்ச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற விரைதேடி
யோயாம லிரவுபகலும்

உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாம
லொருபய னடைந்திலேனைத்

தடமென்ற விடிகரையிற் பந்தபாசங்க ளெ
தாபரம் பின்னலிட்டுத் [னும்

தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்

இடைநின்று தடைசெய்ய வேனென்று கேளா
திருப்பதுவு மழகாகுமோ

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 3

வம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பகர்வசிய தம்பனமலப்

பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல

அம்புகுண்டுகள்விலக மொழியு மந்திரமல்ல
வாகாய குளிகையல

அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
வரியமோ கனமுமல்லக்

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்

கோரக்கர் தனவந்தரிபோ கமுனி யிவரெக்
கூறும் வைத்தியல்ல [லாங்

எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கு
மிச்சையை யெனக்கருளுவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 4

நொந்துவந் தேனென்றுப லதரமு ரைக்கவும்
நுழையாத தென்னமதியோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்று
நோக்காத தந்தையுண்டோ மதை
சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடிக்கவு
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுக னறுமுகவ னிருபிள்ளை யில்லையோ
சந்ததியி யிலாதநீயோ
விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்குதே
வினையொன்று மறிகிலேன்
வேதமுஞ் சாஸ்திரமு முன்னையே புகழுதே
வேடிக்கையி துவல்லவோ
இந்தவுல கிரேழு மேனளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 5

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதும்

வாலாய மாய்க்கோயில் சுற்ருத போதிலும்
வஞ்சமே செய்தபோதும்

மொழியெதுகை மோனையில் லாமலே பாடி
மூர்க்கனேன் மூடனேனும் [னும

மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினும்

பழியெனக்கல்லவே தாய்தந்தை யர்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ

பாரறிய மனைகொளப் பாதியுட லீந்தநீ
பாலனை காக்கொணுதோ

எழில் பெருகு மண்டலங்களிசைவா யமைத்
என்குறைகள் தீர்த்தலரிதோ [தநீ

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 6

அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழு
வறிவற்றதற் கழுவெனோ [வெனோ

அல்லாமல் நான்முகன் றன்னைநொந் தழு
வாசைமூன்றுக் கழுவெனோ [வெனோ

முற்பிறப்பென்னவினை செய்தனென் றழு
மூடருறவுக் கழுவெனோ [வெனோ

முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவெ
முத்தியைநினைந் தழுவெனோ [னோ

தனைநொந் தழுவெனோ வுன்னைநொந் தழு
தரித்திர திசைக்கழுவெனோ [வெனோ

தாரணியி லுன்றனருள் பெற்றபெரி யோர்க
தழுவாததற் கழுவெனோ [ளைத்

இன்னுமெப் பிறவிவருமென் றழுவெனோ
ளெல்லா முரைக்கவருவாய் [வகைக

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 7

காயாமரங்க ளிற்பூபிஞ் சறுத் தேனே
கன்னியர்கள் பழிகொண்டேனே

கடனென்று பொருள்பறித் தேவயிறெரித்
கடுவழியில் முள்ளிட்டனே [தேனே

தாயா ருடற்குள் வரவென்னவினை செய்தெ
தந்தபொரு ளிலையென்றுநான் [னே

தானென்ற கோபமொடு கொலைகளவு செய்
தபசிகளை யேசினேனே [தேனே

வாயாரநின்று பலபொய் சொன்னேனே
வாமிசரைவசை சொன்னேனே [வித்து

வந்தவரை மரியாதை செய்யா தடித்தனே
வழக்கிலோரஞ் சொன்னேனே

ஈயாதலோபி யேயானு லுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 8

தாயாரிருந் தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி

தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தெ
தாரணியை யாண்டுமென்ன ]ன்ன

சேயர்களிருந் தென்ன குருவாய்த் திரிந்தெ
சீடர்க ளிருந்துமென்ன [ன்ன

சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்

ஓயாது மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான்றடுக்க

வுதவுமோ விவையெலாஞ் சந்தையுற வென்
னுன்னிருபாதம் பிடித்தேன் [றுநா

ஈயா திருக்கத் தியாகராஜப் பெயரு
மிசையுமோ வேன்புனைந்தாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே 9

இன்னமுஞ் சொல்லவோ வுன்மனங் கல்லோ
　　விரும்போ பெரும்பாறையோ

இருசெவியு மந்தமோ கருமபல வந்தமோ
　　ஏழைபங்கின னல்லவோ

என்னன்னை மோகமோ யாரிட்ட சாபமோ
　　ஈதுனக் கழகுதானோ

இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
　　இனியுமுன் றனை விடுவெனோ

உன்னைவிட் டெங்குசென் றாலுமுய் திடுவெ
　　உனையடுத்துங் கெடுவெனோ [னோ

ஓயாவி தென்குற்ற முன்குற்ற மொன்று
　　உற்றுப்பார் பெற்றவையா [மிலை

என்னையாள் பவனும்நீ வடிமைநா னுதலா
　　லினியரு ளளிக்கநினைவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
　　தில்லைவாழ் நடராஜனே 10

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருச்சந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன் னிரெண்
சமமாய் நிறுத்தியுடனே [டையும்
பனியொத்த நக்ஷத்தி ரங்களிரு பத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னுல்
பகர்கின்ற கரணங்கள் பதினென்றையும்
பலரையும் அதட்டிஎன்முன் [வெட்டி
கனிபோல வேபேசி கெடுநினே நினேக்கின்ற
கசடர்களே யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனுக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமி
யாள்வதினி யுன்கடன்காண் [யெனே
ஈசனே சிவகாமி நேசனே எனேயீன்ற
தில்லேவாழ் நடராஜனே 11

நடராஜப்பத்து முற்றிற்று.

க

சிவமயம்

# சிவநாமாவழி

## அம்பலத்தரசே

இராகம்: இந்துஸ்தான் பியாக் ஆதிதாளம்

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத்தேனே அருள்விருந்தே

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே

மலைதரு மகளே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே

ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத்தேனே மலைமானே

சிவசிவ சிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா

படனவிவேக பரம்பரவேதா
நடனசபேச சிதம்பரநாதா

அரிபிரமாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடியபாதா

அந்தண வங்கண அம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா

அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா

தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா

கனக சிதம்பர கங்கர புரகர
அனக ரம்பர சங்கர ஹரஹர

சகல கலாண்ட சராசர காரண
சகுன சிவாண்ட பராபர பூரண

இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பர சர்க்கரையே

என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராஜ புத்தமுதே

ஐயர்திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே

உத்தரஞான சிதம்பரமே
சித்தியெலாந் தருமம்பரமே

அம்பல வாசிவ மாதே வா
வம்பல வாவிங்கு வாவா வா

நடராஜ னெல்லார்க்கு நல்லவனே
நல்லவெ லாஞ்செய்ய வல்லவனே

ஆனந்த நாடகங்கண்டோமே பர
மானந்த போனகங் கொண்டோமே

சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா

சந்தத முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கித மென்பது சற்சன வசனம்

சங்கர சிவசிவ மாதே வா
எங்களை யாட்கொள வா வா வா

அரகர சிவசிவ மாதே வா
அருள மு தந்தர வா வா வா

நடன சிகாமணி நவமணியே
திடனக மாமணி சிவமணியே

நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பல பொன்மணியே

உவட்டாது தித்திக்கும் உள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே

நடராஜ வள்ளலை நாடுதலே
நந்தொழிலாம் விளையாடுதலே

அருட்பொது நடமிடுதாண்டவனே
அருட்பெருஞ் சோதியென் னுண்டவனே

நடராஜ மாணிக்கம் ஒன்றது வே
நண்ணுத லாணிப்பொன் மன்றதுவே

நடராஜ பலமது நம்பலமே
நடமாடு வதுதிரு அம்பலமே

நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு

சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு

அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு

அம்பலவாணனை நடினேனே
அவனடியா ரொடுங் கூடினனே

தம்பதமாம் புகழ்பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே

நான் சொன்ன பாடலுங் கேட்டாரே
ஞான சிதம்பர நாட்டாரே

இனித்துயர் படமாட்டேன் விட்டேனே
என்குரு மேலாணையிட்டேனே

இனிப்பாடு படமாட்டேன் விட்டேனே
என்னப்பன் மேலாணையிட்டேனே

சன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கந் துன்மார்க்கம் துன்மார்க்கம்

நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே

நான் சொல்வது மிது கேளிர் சத்தியமே
நடராஜ வெளி வரும் நித்தியமே

நல்லோ ரெல்லோர்க்குஞ் சபாபதியே
நல்வர மீயுந் தயாநிதியே

நடராஜர் தன்னடம் நன்னடமே
நடம்புரிகின்றதும் என்னிடமே

சிவகாமவல்லிக்கு மாப்பிள்ளையே
திருவாள னவன் சீர்ப்பிள்ளையே

சிவகாம வல்லியைச் சேர்ந்தவனே
சித்தெல்லாஞ் செய்திடத் தேர்ந்தவனே

இறவா வரந்தரும் நற்சபையே
என்மறை புகழ்வது சிற்சபையே

என்னிரு கண்ணுள் இருந்தவனே
இறவா தருளு மருந்தவனே

சிற்சபையப்பனை யுற்றேனே
சித்தியெலாஞ் செயப் பெற்றேனே

அம்பலவாணர் தம்மடியவரே
அருளரசாள் மணி முடியவரே

அருட்பெருஞ் சோதியைக் கண்டேனே
ஆனந்தத் தெள்ளமுதுண்டேனே

இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாஞ்செய்சித்தியைக் கொண்டேனே

கருணைநிதியே குணநிதியே
கதிமாநிதியே கலாநிதியே

தருணபதியே சிவபதியே
தனிமாபதியே சபாபதியே

கருணநிதியே சபாபதியே
கதிமாநிதியே பசுபதியே

சபாபதி பாதம் தபோபிரசாதம்
தயாநிதி போதம் சதோதய வேதம்

கருணம் பரவர கரசிர பவ பவ
அருணம் பரதர ஹரஹர சிவசிவ

கனகா கரபுர ஹரசிர கரதர
கருண கரபர கரவர ஹரஹர

கனகசபாபதி பசுபதி நவபதி
அனேக உமாபதி அதிபதி சிவபதி

வேதாந்த பராம்பர ஜயஜய
நாதாந்த நடாம்பர ஜயஜய

ஏகாந்த சர்வேச சமோதம
யோகாந்த நடேச நமோநம

ஆதாம்பர ஆடக அதி சய
பாதாம்புஜ நாடக ஜய ஜய

போதாந்த புரசே சிவாகம
நாதாந்த நடேச நமோ நம

ஜால கோலகன காம்பர சாயக
கால கால வனகாம்பர நாயக

உபல சிரதல சுபகண வங்கண
சுபல கரதல கணபண கங்கண

அபய வரதகர தலபுரி காரண
உபய பரத பர பரபரி பூரண

அகர வுகரசுப கரவர சினகர
தகர வகர நவ புரசிர தினகர

வகர சிகரதின கரசசி கரபுர
மகர வகரவர புஹர ஹர ஹர

பரம மந்தரசக ளாகள கரஞ
படன தந்தரநிக மாகம சரஞ

அனந்த கோடிகுண கரகர ஜொலிதா
அகண்ட வேதசிர கரதர பலிதா

பரிபூரண ஞான சிதம் பர
பரிகாரண நாத பரம்ப

சிவ ஞான தாடக நாடக
சிவ போத பரோகள கூடக

சகல லோகபர காரக வாரக
சபள யோகசர பூரக தாரக

சத்வ போதக தாரண தன்மய
சத்ய வேதக பூரண சின்மய

வரகே சாந்த மகோதய காரிய
பரபா சாந்த சுகோதய சூரிய

பளித தீபக சோபித பாதா
லளித ரூபக ஸ்தாபித நாதா

அனுபத கோர்கரு ணும்பக நாதா
அமிர்த ரூபதரு ணும்புஜ பாதா

அம்போருக பத அரஹர கங்க
சம்போ சிவசிவ சிவசிவ சங்கர

சிதம்பிர காசா பதம்பிர காசா
சிதம்பரேசா சுயம்பிரகாசா

அருட்பிரகாசம் பரப்பிரகாசம்
அகப்பிரகாசம் சிவப்பிரகாசம்

நடப்பிரகாசம் தவப்பிரகாசம்
நவப்பிரகாசம் சிவப்பிரகாசம்

நாத பரம்பரனே பரநாத சிதம்பரனே
நாததிகம்பரனே தசநாத சுதந்திரனே

ஞானநடத்தவனே பரஞானியிடத்தவனே
ஞானவரத்தவனே சிவஞானபுரத்தவனே

ஞானசபாபதியே மறைநாடுசதாகதியே
தீனதயாநிதியே பரதேவி யுமாபதியே

புத்தந்தரும் போதா வித்தந் தருந்தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்தரும் பாதா.

திருச்சிற்றபலம்

## புத்தக விளம்பரம்

| | |
|---|---|
| ஜாதக பாஸ்கரன் | 50-00 |
| சரசோதிமாலை | 30-00 |
| விதான மாலை | 20-00 |
| சேகராசசேகரமாலை | 20-00 |
| சித்திர புத்திர நாயனுர் கதை | 10-00 |
| ஸ்ரீபதி அனுபவ ஜாதகம் | 10-00 |
| சந்தானதீபிகை | 10-00 |
| மாரியம்மன் தாலாட்டு | 5-00 |
| கோளறு பதிகம் | 2-00 |
| சனிதுதி | 1-00 |


*


அச்சுப்பதிவு :

சோதிடப்பிரகாச யந்திரசாலை

கொக்குவில்


விலை : ரூபா 5-00